**கவனிக்க** .- 2025.09.19ஆந் திகதிய 2455 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2456 - 2025 සැප්තැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2025.09.26

2456ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 94 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 95 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 03ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் ( பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

93- B 82723 - 403 (2025/09)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை

புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில்

மக்கள் வங்கி, தலைமை அலுவலகம்,
இல. 75, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02 .

வழக்கு இல. : 167/ MB
ஆதன இலக்கம்: 39/25

*- வழக்காளி-*

*எதிர்*

1. அந்தோனி கே ஆன் பத்மா ஜெனட் ,வடக்கு கந்தகுளிய. கந்தகுளிய.

*மற்றும்*

குடாவ, கந்தகுளிய.

2. அம்பகஹே அய்மன் நிஹால் பர்னாந்து,
வடக்கு கந்தகுளிய, கந்தகுளிய.

*மற்றும்*

குடாவ, கந்தகுளிய.

*- பிரதிவாதி -*

புத்தளம் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் 2024.06.13 ஆந் திகதி வெளிப்படுத்தப்பட்ட சேர்ந்திணங்கும் தீர்ப்பின் பிரகாரம், 167 / MB இனைக் கொண்ட வழக்கிற்காக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதி உடன்பட்ட ரூபாய் 4, 019, 967.89 பணத்தொகையை செலுத்தத் தவறி பிரதிவாதி சேர்ந்திணங்களை மீறியுள்ளதால் குறித்த சேர்ந்திணங்கல் பிரகாரம் வழக்காளியின் வேண்டுதலில் காட்டப்பட்டுள்ளபடி பிரதிவாதிகளிடமிருந்து வழக்காளி அறவிட வேண்டிய வழக்கு விசாரணையின் மீது 2022.06.20 ஆந் திகதிக்கு ரூபாய் 2,598,567.98 பணத் தொகையை மற்றும் ரூபாய் 2, 016, 591.38 பணத்தொகையின் மீது 2022.06.20 ஆந் திகதி முதல் 17.5% வருடாந்த வட்டி வீதத்தின் மீது மொத்த பணத்தொகையைச் செலுத்தும் திகதி வரை வட்டியையும் ஏல விற்பனை கட்டணத்தையும் அறவிட்டுக்கொள்வதற்காக இந்த நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிறைவேற்றல் ஆணை பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டுள்ள இதன் கீழ் அட்டவணையில் விபரமாகக் குறுப்பிடப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் அந்த பிரதிவாதிக்குச் சொந்தமான அனைத்து உரித்துக்கள் மற்றும் உரிமைகள்.

2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பது அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பதிவாளர்/ பிரதி பிசுக்கால்.**

**காணிக்குப் பிரவேசித்தல்.-** கல்பிட்டிய நகரத்திலிருந்து பாலாவி நோக்கி 3 km சென்றதன் பின்னர் குறிஞ்சன்பிட்டிய சந்தியில் வலப்பக்கம் திரும்பி 1.5 km சென்றதன் பின்னர் வலப்பக்கம் சந்திக்கும் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வலப்பக்கம் திரும்பி "குடாவ" பாதையில் பிரவேசித்து அந்தப் பாதையில் 200 m சென்றதன் பின்னர் சந்திக்கும் குடாவ புனித செபஸ்தியன் சிங்கள வித்தியாலயத்தைக் கடந்து சந்திக்கும் வளைவில் இடதுபக்கம் திரும்பி 200 m சென்றதன் பின்னர் சந்திக்கும் முச்சந்தியில் மீண்டும் வலது பக்கம் திரும்பி இன்னும் 200m சென்றதன் பின்னர் சந்திக்கும் அடுத்த முச்சந்தியில் குறித்த வீடு இருக்கிறது.

### மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் காணி பதிவு செய்யும் பிரிவுக்கு உரிய கல்பிட்டிய கோரளை, கல்பிட்டிய பத்துவ, கல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரிய கல்பிட்டிய பிரதேச சபை எல்லைக்குள் கந்தகுளிய கிராம அலுவலர் பிரிவுக்கு உரிய கந்தக்குளிய என்ற கிராமத்தில் அமைந்துள்ள கந்தகுளி தோட்டம் என்ற காணிக்கு ஜே.ஏ.வி. ராஜநாயகம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2000.07.19 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 4236 ஏ இனைக் கொண்ட அளவை வரைபடம் பிரகாரம் லொட் இலக்கம் 01 இனைக் கொண்ட பகுதிக்கு எல்லைகளாவன.-

வடக்கு: பி.பி.பு. 3169 அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 25 இனைக் கொண்ட பகுதியும் ;

கிழக்கு: பாதையும் ;
தெற்கு: மேலுள்ள அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 02 இனைக் கொண்ட பகுதியும் ;
மேற்கு: பி.பி.பு. 3169 அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 27 இனைக் கொண்ட பகுதியும்.

என்ற இங்கு குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் உள்ள அளவில் ஒரு றூட் எட்டு தசம் எட்டு பேர்ச்.(0ஏ.1றூ.8.8பே.) கொண்ட மிகப் பெரிய காணியின் நிலம் மற்றும் அதற்குள் அமைந்துள்ள மரம், செடிகொடிகள், பழங்கள் , கட்டிடங்கள் போன்ற எல்லாப் பொருட்களும் இத்துடன் இருக்கின்றன.

மேலுள்ள காணி கீழுள்ளவாறு மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிடப்பட்ட கந்தகுளி என்ற கிராமத்தில் அமைந்துள்ள கந்தகுளி தோட்டம் என்ற காணிக்கு ஏ.ஓ.எம். நபீஜ் உத்தரவுபெற்ற நில அளவையாளர் அவர்களால் 2012.02.10 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 4299 இனைக் கொண்ட அளவை வரைபடம் பிரகாரம் லொட் இலக்கம் 01 இனைக் கொண்ட பகுதிக்கு எல்லைகளாக.-

வடக்கு: பி.பி.பு. 3169 அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 25 இனைக் கொண்ட பகுதியும் ;
கிழக்கு: பிரதேச சபை பாதையும் ;
தெற்கு: ஜே.ஏ.வி. ராஜநாயகம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் அவர்களின் இலக்கம் 4236 ஏ இனைக் கொண்ட அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 02 இனைக் கொண்ட பகுதியும் ;
மேற்கு: பி.பி.பு. 3169 அளவை வரைபடத்தில் லொட் இலக்கம் 27 இனைக் கொண்ட பகுதியும்.

என்ற இங்கு குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள அளவில் ஒரு றூட் எட்டு தசம் எட்டு பேர்ச்..(0ஏ.1றூ.8.8பே.) கொண்ட மிகப் பெரிய காணியின் நிலம் மற்றும் அதற்குள் அமைந்துள்ள மரம், செடிகொடிகள், பழங்கள் , கட்டிடங்கள் போன்ற எல்லாப் பொருட்களும் இத்துடன் இருக்கும்.
.

பதிவாளர்/ பிரதி பிசுக்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
புத்தளம்,
2025, ஓகத்து 07.

09- 266

---

# நானாவித அறிவித்தல்கள்

**பாராளுமன்றம்**

யூஎன்வீ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

இம்ரான் மஹரூப் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “ யூஎன்வீ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) சிறார்களின் கல்வியை மேம்படுத்தல்;

(ஆ) பெண்களின் சமுதாய பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றம் கருதி தனியான பிரிவொன்றை ஏற்படுத்திக் கொண்டு நடாத்தல்,

(இ) மீன்பிடி மற்றும் விவசாயத் துறைக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் அத்தொழில்களை ஊக்குவித்தல்;

பிறவும்.

இம்ரான் மஹரூப் ,
பாராளுமன்ற உறுப்பினர்.

09- 217

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது